உ
சிவமயம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விசேஷ
விளம்பரத்திற்கு!

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ந் தேதி ஆரம்பமானது.

[புத்தகம் ௫௧] யாழ்ப்பாணம்:— விஷு ௵ வைகாசி௴ ௨௭௳ (1941 ஜூன் 9 திங்கட்கிழமை) [இலக்கம் ௧௭

ஸ்ரீ இராமகிருஷ்ண தேவரும் பைரவீ அம்மையாரும்

(வி. கந்தையா 'சிவபுரி' கல்லடி உப்போடை.)

[மனிதனது ஞான வளர்ச்சியைத் தடுக்கத்தக்கயாதொன்றும் மாதரிடத்து இயல்பாய் அமைந்திலது என்பதை, பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் தமது வாழ்க்கையின்மூலம் உலகினர்க்கு எடுத்து விளக்கியிருக்கின்றார்.]

முற்றொடர்

அப்பால் ஒரு வாரம் கழிந்தபின்னர்த் தமக்கும் பார்ப்பனிக்கும் உள்ள தொடர்பினை உலகத்தவர் கள்ளெனக் கொள்வார் என்றும், தூய்மையின்னதென்றறியா உலகமாக்கள் மாசற்ற நல்லொழுக்கமுடைய அம்மையாரை இழிவு படுத்தவுங் கூடுமென்றும் ஸ்ரீராமகிருஷ்ணர் உன்னி, அதனை ஓர் நாள் குறிப்பாக அம்மையார்க்கு உணர்த்தினர். அதன் உண்மையை உணர்ந்த அம்மையார் அடுத்துள்ள ஆரியதாஹா என்னுமிடத்தில் இருக்கும் தேவமண்டல கட்டத்தில் சென்று வசித்து நாடோறும் வந்து அவரைத் தரிசித்துச் செல்வாராயினர். தம்மகனுக்கு இனிய பணியாரங்கள் முதலிய பண்டங்கள், பாலேடு முதலியன கொண்டு வந்தூட்டுவர். அவரும் உவந்து அவற்றை உண்பர். ஸ்ரீராமகிருஷ்ணர் அறவுரை கேட்புழி உடனே சமாதி யெய்துதலையும், சிந்தனையில் அமர்கையில் உலகவுணர்வின்றிருத்தலையும், இன்னும் அவரது ஒழுக்கத்திற் காணும் அரிய இயல்புகளையும் கண்டு அவரைக் கடவுளின் அவதாரமாகவே அவ்வம்மை கருதி வந்தனள்.

அம்மையார், ஸ்ரீராமகிருஷ்ணரது உடலினுள் வாழ்ந்து வந்த ஆன்மாவாயவர் என்பதனை யறியப் பேருதவியாக நிகழ்ந்த இன்னொரு நிகழ்ச்சியினையும் கூறுவாம் :-பிராமணியார் இராமகிருஷ்ணரைச் சார்ந்த சின்னாட்களிலெல்லாம் அவர்க்கு உடல் முழுதும் பெருவெப்பம் மீண்டு தோன்றிற்று. அவ்வெரிவு வலித்து கொண்டே வந்தமையால் ஆற்றவில்லாராய்க் கங்கை நீரிடை நெடுநேரம் நின்றும், ஈர ஆடை புனைந்தும் நிற்பர். இதனால் வேறு நோய்களேது மேற்படுமென்றஞ்சி நீரினின்றும் வந்து ஆங்குள பளிக்கறைத் தரையை ஈர ஆடையாற் றுடைத்துக் குளிரச் செய்து அதன்மீது கிடப்பர். எனினும் நோய் குறைந்த பாடில்லை. பலமருத்துவர்கள் எவ்வளவோ மருந்து செய்தும் பலிக்கவில்லை. அவர்கள் இது உடலுள்ளகத்தே தோன்றும் பிறழ்ச்சியால் நிகழ்ந்ததென்று காரணம் கூறியகன்றனர். பிராமணியார் அதனை ஆய்ந்து நோக்கி இது நோயல்லவென்றும், கடவுட் பித்தினால் இது ஏற்படுவதென்றும், உளத்தே தெய்வக்காதல் மிகவுயில் ஸ்ரீராதையின் பாலும், ஸ்ரீ சௌராங்கர் பாலும், இத்தவப் பெருஞ்சுரமே தோன்றியதாக அறநூல்கள் கூறுமென்றும், இது ஏற்பட்டார்க்கு நறுமணமாலை சாற்றிச் சந்தனக் குழம்பினை உடம்பெங்குந் தடவக் குணம் வருமென்றும் கூறினர். அக்கூற்றை எல்லாரும் ஏளனஞ் செய்தகல மதுராபாபுமட்டும் நம்பினர். அம்மையார் ஸ்ரீராமகிருஷ்ணர்க்கு அவ்வாறே செய்ய மூன்று தினத்தில் நோய் விரைந்தழிந்தது. அது கண்டு மிகச் சந்தோஷமெய்தியதோடு இராமகிருஷ்ணரிடத்து முன்னினும் மிகுந்த பக்தி உள்ளவருமானார்.

இன்னோர் முறை ஸ்ரீராமகிருஷ்ணர்க்கு மிகவும் வெம்பசி தோன்றிற்று. எதனையும் உண்ட பின்னர் இன்னும் உண்ணவே அவாவெழும். எதை உண்ணுவோமென்ற எண்ணமே எப்போதும் மனத்திலிருந்து வருத்தும். இதனை அவர் வெகு கவலையொடு அம்மையாரிடம் உரைத்தார். அத்தவப் பெருஞ் செல்வியார் அவரை நோக்கி "இது நோயல்ல' ஞானநெறி வழி முயல்வார்க்கு இத்தகைய உலகவியலோடு முரணும் நிலைகள் வந்தெய்துதல் இயல்பே. இதனையும் யானே தீர்ப்பல்'' என்று கூறினர். அவர் மதுராநாதரை நோக்கி ஓர் அறையில் உணவுக்கு வேண்டிய பண்டங்கள் எல்லாம் நிரம்பச் சொன்னர். அவ்வாறே செய்தபின் அவ்வறையுள் இராமகிருஷ்ணரை விட்டு விரும்பியதை உண்ணுமாறு சொன்னர். அவரும் அவ்வாறே வேண்டியவற்றைத் தின்றுகொண்டு திரிய மூன்று நாட்களில் நோய் நீங்கிற்று. இதனை ஸ்ரீராமகிருஷ்ணரே பின்னாளில் தம் சீடர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

பிராமணியார் இவைகளால் ஓர் முடிவுக்கு வந்து அவரைச் சாதாரணமான ஓர் பெரிய நல்லரென்றும், கடவுளின் அவதார புருடரே யென்றும் அவரிடமும் பிறரிடமும் உரைத்தனர். இதனைச் ஸ்ரீராமகிருஷ்ணர் வாயிலாகவே அறிந்த மதுராபாபு அவரைப் பார்த்து "பகவானின் அவதாரங்கள் பத்தென்று நூல்கள் கூறுவ, எவ்வாறு பதினொன்றாகும்? ஆயினும் நீர் காளியன்னையின் அருட்பேறெய்தியவரே யென்பதனை யானும் ஒப்புவல் என்றார். அப்போது அதன்மாத்திரத்தே அங்குற்ற பிராம்மணியம்மையார் மதுரநாதரை நோக்கி; "அவதாரங்கள் இருபத்திரண்டென்றும், இன்னும் எண்ணிறந்தன வென்றும், பாகவதம் கூறும். அஃதன்றியும், ஸ்ரீசௌராங்கர் மீண்டும் தோன்றுவரென வைணவ நூல்கள் கூறுவன. அந்நூல்களிற் கூறப்பட்டனவும் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் உள்ள ஒப்புமை வெள்ளிடை மலைபோல் வெளிப்படுகின்றன வன்றோ" என்று கூற மதுராபாபு மறுமொழியுரைக்க வியலாதிருந்தார். எனினும் அவர் மனதைச் சந்தேகம் பிய்த்துத் தின்றது. பைரவி பிராம்மணியாரின் வார்த்தைகளைக் கேட்டவர்களும் சந்தேகம் கொண்டனர். எனவே மதுராபாபு இதை ஆலோசிக்க ஓர் கழகம் கூட்டினர். அதற்கு அக்காலத்துப் பேர்பெற்றிருந்தவர்களான வைணவசரணர், கௌரி பண்டிதர் என்பார் அழைக்கப்பட்டனர். பிராமணியாரின் வார்த்தைகளை ஆக்ஷேபித்துப் பேசவந்த அவர்களை மதுராபாபு அழைத்தனராயினும், அவ்விருவரும் ஸ்ரீராமகிருஷ்ணரைக் கண்டவுடனேயே அம்மையாரின் வார்த்தைகள் மெய்யென அறிந்து கொண்டதால், அவர்கள் கூறிய முடிபுகள் அவரின் வார்த்தைகளை உறுதிப்படுத்துவனவாகவே இருந்தன. அவ்விருவரும் தமது ஞானசாதனங்களில் மறைவாய் இருந்த சில பொருள்களைப் பற்றிய அறிவை குருதேவரிடமிருந்து பெற்று அவரையே தலைக்கொண்டு சென்றனர் என்ப.

ஸ்ரீராமகிருஷ்ணரது வாழ்க்கைச்சரிதத்தில் அவர் பிராம்மணியாரை எதிர்ப்பட்ட ஞான்று முதலுள்ளவை முதன்மையானவையாகும். இருவர்க்கும் ஏற்பட்ட நட்பு காலடைவில் முதிர்ந்தது. ஸ்ரீராமகிருஷ்ணர் அப்பெண்மணியைத் தனது ஞானகுருவாகக் கொண்டு சிறந்த ஒருபாசகராகக் கருதி அவரது தலைமையில் தந்திர நூல்களுட் கூறப்பட்ட சாதனங்களில் மிகக் கடினமானவற்றையும் முறையே பயின்றனர். அம்மையாரின் உபதேசமும் தமக்குச் சேடாயமைந்த பெரிய சினிணக்கத்தால் பரக விரிந்தேன்க.

ஸ்ரீராமகிருஷ்ணர்க்கும் பிராமணியார்க்கும் உள்ள நட்பினையிட்டு நாம் சிந்திக்கில் மிகுந்த ஆச்சரியமும், சிறந்த ஞானமும் ஒருங்கே அடைவோம். பொன்னையும் பெண்ணையும் துறத்தல் மெய்ப்பொருளுணர்ச்சியுடைய அடியார்க்கு இன்றியமையாதது. இன்னும், சாதன வாழ்க்கையையுடைய ஒருவர்க்கு ஒரு பெண்ணுடனிருத்தலினும் மிக்க அச்சம்பயப்பது வேறொன்றில்லை. எனினும் இவை குருதேவரது வாழ்க்கையில் ஏன்றி ஆபத்தானவையாகவே யிருக்கின்றன. பெண்டிரொடு இணக்கற்க என்று அறிஞர்கள் எச்சரித்ததனை மாதுபடகோனவும் கூடுமாதலின், அதனை நீக்குதற்கே ஸ்ரீராமகிருஷ்ணர் மடவார் ஒருவரையே மெய்நெறிக்கட் தலைவராகக் கொண்டு உபதேசம் பெற்றனர் என்பது மிகுதியும் சாலும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் ஒருவனுடைய ஞான வளர்ச்சியைத் தடுக்கத் தக்கயாதொன்றும் பெண்களிடத் தியல்பாய் அமைந்திலதென்பதையும்; மனிதனது உயர்வுக்கும் தாழ்வுக்கும், அவனுக்குத் துணையாவதற்கும் இடையூறாவதற்கும் காரணமாயிருப்பது அவனது மனோநிலையே என்பதையும்; உலகிற்குக்காட்டியருளினர். மடவார்களது வடிவழகின் மயக்கித் துதித்திடல் அவர் மனிதரை உயர்நெறிச் செலுத்தாது தாழ்த்துவர். ஆனால் அவர்களது தெய்வப் பெற்றியை யோர்ந்து உலகமனைத்தையும் இன்றளிக்கும் அன்னையின் வடிவினரெனத் தம்மை இறைஞ்சு சுவாமை மெய்நெறிக்கட் செலுத்தி, அவர்க்குள நிலைகளை யுறக் கண்டுணர்ந்து, பேரின்ப நல்குமாற்

தொடர்ச்சி 4 ம் பக்கம்

பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு

இந்திய அரசாங்கத்தின் அறிக்கை

ஸிம்லா ஜூன் 2—

பத்திரிகைக் காகித இறக்குமதிக் கட்டுப்பாடு சம்பந்தமாக முழு நிலைமையையும் விளக்கி இந்திய அரசாங்கத்தார் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர்:-

1941 எப்ரல் 12ந் தேதி முதல் கப்பல்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சரக்குகளைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்ட நாமாவலியில் பத்திரிகைக் காகிதத்தையும் சேர்த்த பொழுது வட அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பத்திரிகைக் காகிதம் சம்பந்தமாக நீண்டகாலமாக இறக்குமதி செய்து வரும் வர்த்தகர்களுக்கு லைசென்ஸுகள் வழங்குவதென ஏற்பாடாகியது. 1940-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்திலிருந்து 1941-ம் வருஷம் ஜனவரி மாதம் வரையில் அவர்கள் இறக்குமதி செய்துள்ள சரக்கின் அளவை ஆதாரமாகக் கொண்டே லைசென்ஸுகள் வழங்குவதென்று ஏற்பாடு. ஸ்கோண்டிநேவியாவிலிருந்தும் போல்டிக் நாடுகளிலிருந்தும் பத்திரிகைக் காகிதம் கிடைப்பது நின்றுவிட்டதால் ஏற்பட்டுள்ள நிலைமையை ஆதாரமாகக் கொள்ளவே மேற்படி காலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இடைக்கால ஏற்பாடே

நாட்டிலுள்ள எண்ணற்ற ஆங்கிலப் பத்திரிகைகள், தேசபாஷைப் பத்திரிகைகளின் குறைந்த பட்சத் தேவையைக் கணக்கிட்டு அதற்கேற்றபடி இறக்குமதியை வகுக்க ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுவரும் வரையில் இடைக்கால ஏற்பாடாகவே மேற்படி கட்டுப்பாடு உத்தேசிக்கப்பட்டதே தவிர, வேறில்லை. குறுகிய காலத்துக்குள் மேற்படி திட்டத்தைத் தயாரித்து விடுவதற்கில்லை எனினும், கட்டுப்பாட்டை மட்டும் உடனே அநுஷ்டிக்கவேண்டியது அவசியமாகும்.

அரசாங்கத்தின் உத்தேசம்

மேற்படி இடைக்கால ஏற்பாட்டை ஆக்ஷேபித்துப் பலர் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்கள். எத்தகைய இடைக்கால ஏற்பாட்டிலும் இத்தகைய கஷ்டங்கள் உண்டாகவே செய்யும். விசேஷமான சில கஷ்டங்களைப்பற்றி அரசாங்கத்தார் கவனித்து வருகின்றனர். முன் இறக்குமதிகளை அளவாகக் கொள்ளாமல் தேவையையே கொள்ளவேண்டுமென்பதே அரசாங்கத் திட்டத்தின் உத்தேசம்.

இறக்குமதி லைசென்ஸுகள்

பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு சம்பந்தமாக அரசாங்கத்தார் இப்பொழுது ஒரு உத்தரவு வெளியிட்டிருக்கின்றனர். இதுவே அடுத்தபடியான நடவடிக்கை. பத்திரிகைகள் வெளியிடப்படும் அச்சுக்கூடங்களுக்குமட்டுமே காகிதத்தை விற்க வேண்டுமென்பது முதல் நிபந்தனை. பத்திரிகைகள் அச்சிடுவதற்கு மட்டுமே மேற்படி அச்சுக்கூடங்கள் காகிதத்தை உபயோகிக்க வேண்டுமென்பது இரண்டாவது நிபந்தனை. வேறு காரியங்களுக்காயின் அரசாங்கத்திடமிருந்து பிரத்தியேக அனுமதி பெற வேண்டும். காகித உபயோகத்தின் அளவு சம்பந்தமான கணக்குப் பத்திரிகாலயங்களிலும் கையிருப்புக் கணக்கு வர்த்தகர்களிடமும் இருக்கவேண்டும். இப்புள்ளி விவரங்களைச் சோதித்து ஒவ்வொரு பத்திரிகைக்கும் இவ்வளவு காகிதம் என்ற அளவு நிர்ணயிக்கப்பட்டதும் அவற்றிற்கேற்றபடியே இறக்குமதி லைசென்ஸுகள் வழங்கப்படும்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

வகுப்பு ஒற்றுமையும் காங்கிரஸும்

முட்டுக்கட்டை போடுவதுயார்?

டாக்டர் லத்தீபுக்கு ராஜன் பாபு கடிதம்

பாட்னு ஜூன் 2

ராஜன்பாபுவிடமிருந்து தமக்குக் கிடைத்த ஒரு கடிதத்தைப் பற்றி டாக்டர் அப்துல் லத்தீப் சமீபத்தில் பிரஸ்தாபித்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அக்கடிதத்திலிருந்து ஒரு வாக்கியம் பிரசுரிக்கப்பட்டதன் காரணமாகத் தப்பெண்ணத்துக்கு இடமேற்பட்டுவிட்டதால், தமது கடிதத்தின் முழுவிவரத்தையும் ராஜன்பாபு இப்பொழுது பத்திரிகைகளுக்கு அனுப்பியிருக்கிறார். அக்கடிதம் பாட்னுவிலுள்ள சதகத் ஆசிரமத்திலிருந்து மே மாதம் 22-ந் தேதி எழுதப்பட்டது. அதில் ராஜன்பாபு குறிப்பிட்டிருந்ததாவது:-

வகுப்புப் பிரச்னை

மே 15-ந் தேதிய தங்கள் நீளமான கடிதம் கிடைத்தது. எந்தக் கோஷ்டி அல்லது கட்சி அல்லது வகுப்புச் சம்பந்தமான அந்தஸ்து எதுவும் எனக்கு இல்லாததால் தங்கள் கடிதத்தில் எழுப்பப்பட்டிருக்கும் பிரச்னைகளைப்பற்றி விவாதிப்பது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. தவிர, தாங்கள் ஆரம்பித்து வைக்கும் விவாதத்தினுல் பயனேற்படுமா என்பதும் எனக்குத் தெரியாது.

வகுப்புப் பிரச்னையைத் தீர்த்து வைப்பது சம்பந்தமான எந்தத் திட்டத்தைப் பற்றியும் யோசனையைப் பற்றியும் விவாதிக்கக் காங்கிரஸ் எப்பொழுதும் மறுத்ததேயில்லை. வாஸ்தவமான கஷ்டம் யாதெனில், உருவான யோசனைகளை வெளியிடுவதற்கோ அன்றி அவற்றிற் கவனஞ் செலுத்துவதற்கோ தகுந்த நிலைமையை உண்டுபண்ணுவதற்கே எங்களை விடவில்லை. ஆனால், பழைய சச்சரவை இப்பொழுது கிளறுவதாற் பயனென்ன?

பிரதேசங்களின் அதிகாரம்

மத்தியிலல்லாமல் சமஷ்டியின் பல யூனிட்டுகளிடமே மிகுதியான அதிகாரத்தை ஒப்படைக்கவேண்டுமென்ற பிரச்னையைப்பற்றி ஏற்கெனவே பலமுறை விவாதித்தாகி விட்டது; அது பற்றி மேலும் விவாதிக்கலாம். ஆனால், இதிலொரு விஷயம். அதாவது மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்துக்குட்படும் இலாகாக்கள் எவை; யூனிட்டுகளிடம் ஒப்படைக்கும் இலாகாக்கள் யாவை என்பதை நன்கு விளக்கி விட்டால் இதிலுள்ள கஷ்டத்தைக் குறைத்து விடலாம். இராணுவம், அன்னிய நாடுகளுடன் சம்பந்தம் போன்ற விஷயங்களை யூனிட்டுகளுக்கு விட்டுவிட முடியாது; விட்டுவிடவும் கூடாது. ஏனெனில் அவற்றைக் கவனிக்க யூனிட்டுகளுக்குப் போதிய வசதிகள் இரா. தவிர செலவும், சிடுக்கும் அதிகமாகும்.

ஒற்றுமை குலைவதா?

இந்தியாவின் ஐக்கியத்துக்குப் பாதகமேற்படும் வகையில் யூனிட்டுகளுக்குச் சர்வாதிகாரம் அளிக்கப்படக்கூடாதென்பதே பிரிவினைத் திட்டத்தை எதிர்ப்பவர்களின் அடிப்படையான கருத்து. கொள்கைகள் விஷயமாக மத்திய அரசாங்கத்துக்கும் யூனிட்டுகளுக்குமிடையே சச்சரவுகள் ஏற்படுவதால் தேசத்துக்குத் தீங்குண்டாகும்படி விடக்கூடாது.

இந்தியாவின் ஒற்றுமைக்கும் பாதுகாப்புக்கும் தீங்கு ஏற்படாத வரையில் அதிகாரப்பிரிவினையில் கஷ்டங்களேற்பட இடமில்லை. ஆனால், மேற்படி இரண்டும் குலையக்கூடிய எந்த ஏற்பாட்டையும் இந்தியரிற் பெரும்பாலார் அங்கீகரிப்பதற்கில்லை.

மத்திய அரசாங்கமென்று ஒன்று இருக்க வேண்டுமானல், அதனுடைய அதிகாரங்களையும் யூனிட்டுகளின் அதிகாரங்களையும் எப்படி வரையறுக்காமலிருக்க முடியும்? இதைப் பொறுத்துப் பிரச்னையைக் கவனித்தால், இந்திய ஒற்றுமையும், பாதுகாப்பும் குலையாத திட்டமொன்றை வகுக்க இந்தியருக்குத் திறமையோ ஆற்றலோ இல்லாமலில்லை.

பழைய கெய்ஸரின் தேசவியோகம்

கடைசி ஜெர்மன் சக்கரவர்த்தி இவரே

லண்டன், ஜூன் 4—

பழைய கெய்ஸர் இன்றுகாலை 10½ மணிக்கு தமது 82 வது வயதில் டோன நகரிற் காலமானுரென்று ஆம்ஸ்டர்டாம் செய்தி கூறுகிறது. சென்ற மகாயுத்தத்தில் இவர் உலகத்தின் வெறுப்பு அல்லது வணக்கம் ஆகிய இவைகளின் சின்னமாக விளங்கினர். இவரது குணாதிசயங்களைப் பற்றியுஞ் செயல்களைப் பற்றியும் இன்னுஞ் சரித்திராசிரியர்களால் திருப்திகரமாக முடிவு செய்து கொள்ள முடியாதிருக்கின்றன.

பழைய கெய்ஸரோடு ஜேர்மன் ஏகாதிபத்தியத்தின் கெய்ஸர்களிற் கடைசியான 2வது வில்ஹெல்ம் மறைந்தார்.

பழைய கெய்ஸர் 1859ம் ஆண்டு ஜனவரி மீ 27ந் திகதி பேர்லினிற் பிறந்தார். பிரஷ்யாவின் பிரெடரிச் இளவரசரின் மூத்தமகன். இவரது தாயார் விக்டோரியா ராணியின் மூத்தமகளான விக்டோரியா இளவரசியாவார். அதாவது பழைய கெய்ஸர் விக்டோரியா ராணியின் பேரப்பிள்ளையாவார்.

பிறந்தபொழுதே இவருக்கேற்பட்ட காயத்தால் இவரது இடதுகரம் நிரந்தரமாகச் செயலற்றே போய்விட்டது.

பழைய கெய்ஸர் இரண்டாவது வில்ஹெல்மாகப் பிரஷ்யாவின் மன்னராகவும் ஜேர்மனியின் சக்கிரவர்த்தியாகவும் 30 வருஷகாலம் ஆட்சி புரிந்தார். ஐரோப்பாவிலேயே மிகவும் பிரபலஸ்தர்களில் ஒருவராக விளங்கினர். மகாயுத்தத்தில் ஜேர்மனி தோல்வியடைந்தால் அவர் 21 வருஷங்களுக்கு முன் மிகுந்த தயக்கத்தோடு பட்டந்துறந்தார்.

'காணமற்போன' நண்பர் கைது

வங்காள வேலைக்காரரின் கொலைபற்றிச் சந்தேகம்

மிஸ்டர், எச். ஈ. நியூன்ஹாமின் வங்களாவில் வேலை பார்த்து வந்த சுந்தரம் என்பவர் சென்ற திங்கட்கிழமை இரவு கொலை செய்யப்பட்டமை சம்பந்தமாகச் சென்ற புதன் கிழமை பிற்பகல், ஒருவர் புறக்கோட்டையிற் சந்தேகத்தின் பேரிற் கைது செய்யப்பட்டார்.

காணமற் போனதாகச் சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் நண்பரான என். எஸ். ஞானமணி என்பவர்தான் சந்தேகத்தின் பேரிற் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் இன்று நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கல்கத்தாவில் வீடுகள் சோதனை

30 குண்டர்கள் கைது

கல்கத்தா ஜூன் 2

கல்கத்தா போலீஸின் உளவறியும் இலாகாவைச் சேர்ந்தவர்கள் இன்று நகரின் பலபகுதிகளிற் பல வீடுகளைச் சோதனையிட்டுக் குண்டர்கள் சட்டப்பிரகாரம் 30 பேர்களைக் கைது செய்தனர்.

இந்தியா, ஹிந்து என்னும் பெயர்கள்

திவான்பகதூர் டாக்டர் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்.

நம் தேசத்துக்குப் பெயர் இந்து தேசமென்பது. இந்தியா அல்லது இந்தியதேசமென்றும் பெயர் வழங்கப்படுகிறது; இந்தியா என்பதும் இந்துதேசமென்பதும் ஒரே வார்த்தைதானென்பது பெரும்பான்மை ஜனங்களுக்குத் தெரியாது. எவ்வாறிப் பெயருண்டாயிற்றென்பதும் அநேகருக்குத்தெரியாததே. இந்து ஹிந்து என்னுமிரண்டு பதங்களும் ஸிந்துவென்னும் நதிப்பெயரினின்று முண்டானவை. ஸிந்துவென்னும் நதி நம் தேசத்து நதிகளில் பெருமை வாய்ந்த தீர்த்தங்கள் ஏழில் ஒன்று. இந்நதி நம் தேசத்துக்கு மேற்கே எல்லை மாகாணங்களின் வழியாய் இமயத்தின் வடபாகத்திலிருந்து புறப்பட்டு தற்காலம் பஞ்சாப் அல்லது பஞ்சநதம் என்கிற மாகாணத்தைக் கடந்து அதற்கப்பாற்பட்ட ஸிந்து தேசத்தையும் தாண்டி அரபிக் கடலென்னும் இந்து மகாசமுத்திரத்தின் ஒரு பாகத்திற் கடலோடு கலந்துவிடுகிறது. இந்த மகாநதி பாயும் பிரதேசத்திற்குப் பொதுவாய் ஸிந்து தேசமென்னும் பெயர் வாய்த்ததுபோலும். ஒரு காலத்தில் இதற்கு ஸப்த ஸிந்துவென்னும் பெயர் வடமொழியில் வழங்கி வந்தது. இவ்வளம் வாய்ந்த நன்னாட்டை, நாம் பொன்னி நாடென்று காவிரி சூழ்ந்த நாட்டைச் சொல்லுமாப்போல, ஸிந்துதேசமென்று சொல்வது சாதாரணமான வழக்கன்றோ? இந்த ஸிந்துவென்னும் பெயர் வடமொழி. அதனால் ஸிந்து நாட்டிலிருந்த ஜனங்களுக்குப் பொதுவாய் ஸைந்தவர் அல்லது ஸிந்துதேசத்தவரென்று வழங்குவதும் சாதாரணமேயன்றோ! இந்நதியின் பெயரிலிருந்தே ஸிந்துவென்னும் பெயர் ஸமுத்திரத்திற்கும் ஆயிற்றென்பது வடமொழி வல்லுனர் கொள்கை. அது அவ்வாறே ஆகுக.

ஸிந்து, ஸிந்துதேசம், ஸைந்தவரென்னும் பெயர்கள் எக்காலத்திலும் வழங்கப்பட்டவை! அவைகளை வழக்கத்தில் கொண்டு வந்தவர் யார் என்று கேட்பின் இன்னார்தானென்று தீர்மானம் சொல்லவேண்டிய அதிகாரமேற்பட வில்லையாயினும், இம்மொழி வடமொழியாதலின், வடமொழி வழங்கிய மனிதர்களே இப்பெயரையிட்டாண்டு வந்தவரென்று சொல்லத்தகும். இவ் வடமொழியேயோ அல்லது அதனுடன் சம்பந்தம் பெற்ற மற்றொரு பாஷையோ இதை வழங்கி வந்திருத்தல் வேண்டும். ஸிந்துவென்னும் வார்த்தையானது, ஸிந்து தேசத்துக் கணித்தாய் அப்பாற்பட்டிருந்த பாரஸீகத்தவரால் வழங்கப்பட்டு, ஸிந்து தேசத்து ஜனங்களுக்குப் பெயராய் வாய்த்ததுபோலும். வடமொழிக்கணித்தாகிய பாரஸீகத்தில் இது இரண்டு உருவங்களோடு எழுதப்பெற்றது. ஸிந்து வென்றொரு பாகத்திலும் ஹிந்துவென்று மற்றொரு பாகத்திலும் நடைபெற்ற இப்பெயர் பாரஸீகத்துக்கப்பாற்பட்ட நாடுகளில் புகுந்தபொழுது பாரஸீகத்தின் எந்தப்பாகத்தினின்றும் வந்ததோ அந்த வுருவத்துடனே நடைபெற்றது. ஆகையால் எடுத்தாண்டவர் இந்துவென்னும் உருவத்தையே அங்கீகரித்து இந்நாட்டார்க்கு கிரேக்க பாஷையில் இண்டாய் என்னும்பெயரிட்டனர். இதனின்றும் இந்தியாவென்னும் பதமும், பாரஸீகராலெடுத்தாளப்பட்ட ஹிந்துவென்னும் பதமும் வெவ்வேறு காலங்களில் நம்நாட்டு வழக்கில் குடியேறின போலும்.

இவ் வடமொழிப் பெயர் ஸிந்துநதிக்கு அணித்தாயிருந்த நாட்டின் பெயராயாரம்பித்து நாள் நடையில் இத்தேசமுழுமைக்குமே பெயராய் நிலைபெற்றது. இப்பெயர் பெற்ற தேசத்துக்கு எல்லைகூறப்புகின் வட திசைக்கு இமயமும் தென்திசைக்குக் குமரியும் கீழ்மேற் புறங்களிற்கடல்களுமமைந்ததாகும்.

இப்பெருந் தேயத்துக்கிது வெளிநாட்டாரிட்ட பெயராயின், நம் நாட்டாரதற்குப் பெயரே யிடவில்லையாவென்றால், அவர்கள் வேறு பெயரிட்டு வழங்கிவந்தனர்போலும். ஆரியவான்றோர் கொள்கைப்படிக்கு பூமியின் பிரிவுகளான் ஒன்பது பெரும் பிரிவுகளில் பாரத வர்ஷமென்று பெயர்பெற்ற ஒரு பெரிய கண்டத்தில் மேருமலைக்குத் தென்பாற்பட்ட பாகம் பரதக்கண்டமென்று பெயர்பெற்றது. இப்போதுமிப்பெயர் வழக்கில் எடுத்தாளப்படுகிறது. இப்பெயர் தமிழ் நாட்டில் பரதமென்றும், சாதாரண வழக்கில் பரததேசம் அல்லது பாரதபூமியென்றும் வழங்கப்படுகிறது. இதை இப்போதும் வழக்கத்தில் எவ்விரதம் செய்வோருஞ் சுட்டிச் சொல்லித் தாமிருக்குமிடத்து விரதத்தை யாரம்பிப்பார்கள். இதைக் கன்னியா குமரியில் கோடிபவாசிகளில் இன்றைக்குங் காணலாம். ஆகையால் இமயமுதற் குமரிவரைக்கும் பரவிக்கிடக்கும் நம் தேசம் ஒரு தேசமாகவே பாராட்டப்பட்டு உள்நாட்டாரால் பரதக் கண்டம் அல்லது பரததேசமென்றும், வெளி நாட்டாரால் இந்தியா அல்லது ஹிந்துதேசமென்றும் பெயர்பெற்று நின்றதுமன்றித் தொன்று தொட்டு ஒருதேசமாகவே பாவிக்கப்பெற்றும் வந்தது.

இவ்வளவு விசாலமான இப் பெரிய தேசம் எக்காலத்திலாவது ஒரே மாதிரியான ஜனங்களால் குடியேறப்பெற்று, அவர்களெல்லாரும் ஒரே குழுவினராயும், ஒரே பாஷை பேசியவராயும், ஒரே விதமான மதம், பயிற்சி, நாகரிகம் இவைகளையுடையவர்களாயுமிருந்தனரென்று சொல்ல வாய்க்குமோ வென்றால், நமக்குப் புலப்பட்ட வரைக்கும் இவ்வொற்றுமை பெற்றிருந்ததாகச் சொல்லமுடியாது. பல்லாயிரம் வருஷங்களாய் இந்நாட்டு மக்கள் வெவ்வேறு ஜாதி, பாஷை, நாகரிகம் இவைகளைப் பெற்று வெகுவாகத் தங்கள் மார்க்கமே வெவ்வேறுகப் போய்க்கொண்டிருந்தவராயினும் இவ் வேற்றுமைகளையெல்லாம் உள்ளடக்கி இதற்குமேற் பரவியிருந்த ஒற்றுமையும் பொதுநோக்கமுமுடைத்தானவர்களாயிருந்தார்களென்று சொல்ல வேண்டுவதற்கான சான்றுகள் காணக்கிடைக்கும். இப் பொதுநோக்கமும் ஒற்றுமையுந்தான் நம்மிந்தியதேசத்தின் நாகரிகப் பயிற்சி விசேஷமென்று கொண்டாடத்தக்கது. இத் தேசத்திலேயே தோன்றுதொட்டு நிலைத்தவரும், பலவிடங்களிலிருந்து வெவ்வேறு காலத்து, வெவ்வேறு காரணங்களாலிங்குவந்து குடியேறியவருமாக நூற்றுக்கணக்காய்வேறுபாடுபெற்ற ஜனப்பகுதிகளை நம் தேசத்திலதிகமாகக் காணலாம். குளவி மற்ற ஜந்துக்களைக் கொட்டிக் கொட்டித் தன்னிறமாக்கிக் கொள்வதுபோன்ற தன்மை இந்திய நாகரிகப் பயிற்சியிற் கிடையாது. ஒவ்வொருவரையும் அவர் வழியே விட்டுப் பார்வையினுலுங் கேள்வியினுலும் முன்னேற்றம் பெறுமாறு செய்வது இந்தியப் பயிற்சியின் முதற் கருத்து.

இவ்வாறான நிலைமையில் தேசத்தில் ஒற்றுமையை அதிகப்படுத்த வேண்டுமேயானல் எல்லா ஜனங்களையு மொரே பகுதியாக்கிச் செய்துவிடலாமென்னும் பிரயத்தனம் முடிவு பெறுவதன்று. ஒற்றுமையதிகரிக்க வேண்டுமானுல் அதற்கு வழி வேறு. எல்லோரும் எல்லா விஷயங்களிலும் ஒருபாற்பட்ட மனத்தினராக வேண்டுமானுல் இப்போதைய நாகரிக ஏற்பாடு முழுமையுமழிந்துபோகச் செய்து வேறு புதிதான நாகரிகமொன்றைச் சிருஷ்டிக்க வேண்டும். அது எவ்வாற்றானும் சாத்தியமாமென்று நன்கு ஆலோசனைசெய்து நோக்குங்கால்,

தொடர்ச்சி 4ம் பக்கம்

ாழ்க அந்தணர் வானவ ரானினம்
ீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
ூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

ாழ்ப்பாணம் விஷு ௵ வைகாசி௴ ௨௭௳ திங்கட்கிழமை

சமயநூற் கல்வியை ஊட்டுவதெவ்வாறு?

I

இங்குள்ள சைவவித்தியாசாலைகள் கல்லூரிகளில் இப்பொழுது ஊட்டப்படுஞ் சமயக் கல்வி போதியதன்றென்றும் அங்ஙனந்தான் ஊட்டப்படினும் மாணாக்கர் சமய நூல்களை ஆர்வத்துடன் கற்கின்றிலரென்றும், இதற்கென் செய்யலாமென்றும் உண்மையான சைவாபிமானிகள் சிலர் கவலைப்படுகின்றார்கள். இதை விட்டு யோசித்து ஆகவேண்டிய கருமங்களைச் செய்யும் நோக்கமாக, சென்ற சனிக்கிழமை (7-6-41) பகல் 10 மணிவரையில் ஆசிரியர் ஸ்ரீமத் சு. சிவபாத சுந்தரமவர்கள் தலைமைவகிக்க, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு கூட்டமுங் கூட்டிச் சில தீர்மானங்களுஞ் செய்யப்பட்டன.

சமய ஒழுக்கமும் தெய்வபக்தியும் சமயநூலுணர்ச்சியும் இக்காலத்தில் இக்காட்டிலே தேய்ந்து வருவதையிட்டுப் பல அறிஞர்கள் பலவாறு காரணங் காட்டுகின்றனர். அப்பலருட் சிலர் இக்காலத்து மாணவர்க்குச் சமய அறிவை ஊட்டுதற்காகிய இலகுவான வசன நூல்கள் இல்லையென்றும் அப்படியான நூல்கள் எழுதப்படல் வேண்டுமென்றும் அபிப்பிராயப் படுகின்றனர். வேறு சிலர் இக்காலத்து மாணாக்கர்கள் "சயன்ஸ்" எனப்படும் தத்துவசாத்திரத்தைப் படித்துவிட்டார்கள், அந்தச் சாஸ்திர அறிவுள்ள மாணாக்கருக்குச் சமயக்கொள்கைகளிலும் கட்டுப்பாடுகளிலும் நம்பிக்கையினம் பிறக்க, அதனால் அவர்கள் சமயநூல்களை ஆர்வத்துடன் கல்லாதொழிகின்றனரென்றும் ஆனதால் அவர்களுக்கும் ஒத்ததாய்ச் சமயநூல்களை எழுதி வெளியிடல் வேண்டுமென்று சாதிக்கின்றார்கள். அதாவது காலத்திற்குத் தக்கபடி சமயக் கொள்கைகளை மாற்றிவிடல் வேண்டுமென்பது அந்தச் சிலரின் அபிப்பிராயமாகும். ஒரு சிலர் புராணங்களிற் சொல்லப்பட்ட கதைகள் கொள்கைகள் இக்காலத்துக் கொள்கைக்கு மாறானவையென்றும் அவைகள் நம்பத்தக்கனவல்லவென்றும் அந்தப் புராணக் கதைகளே எங்கள் சமயத்தில் ஐயத்தை உண்டாக்கி விடுகின்றனவென்றும் ஆனதாற் புராணங்கள் சமய சம்பந்தமான நூல்கள் என்ற கொள்கையை விட்டொழிதல் வேண்டுமென்றுமெண்ணுகின்றனர். ஒழிந்த சிலர் சமயவிஷயமாகத் தாம் உபாத்தியாயர்களென்றமுறையிற் படிப்பிக்கத்தொடங்கினாற் பிள்ளைகள் தம்மிடத்துப் பல ஆட்சேபங்களை நிகழ்த்துகின்றனரென்றும் அந்த ஆட்சேபங்கட்கெல்லாம் விடைதரக்கூடிய நூல்களை அறிஞர் எழுத வேண்டுமென்றுங் கூறினர். ஏனைய சிலர் தெய்வநம்பிக்கை வேறு, சமய நூலறிவு வேறு, தெய்வத்தில் நம்பிக்கை வைத்து வழிபாடு செய்து நல்லொழுக்கத்துடன் ஒழுகினால் காலகதியில் சமய சாத்திரங்களைக் கற்கக்கூடிய அறிவு வர அவற்றைப் படித்தல் முடியுமென்று பொருந்தக் கூறுகின்றனர். மற்றைச் சிலர் இந்நாட்டி பிள்ளைகளெல்லாரும் முதல் தாம் சமயக்கொள்கைகளைச் சந்தேகமறத் தமது விளங்கிக் கொண்டபின் அல்லாமல் எதனையுங் கைக்கொள்ள மாட்டோமென்று தராட்சேபஞ் செய்கின்றார்கள், அப்படியான நோக்குள்ள முன்னவர்களுக்குச் சமய அறிவை ஊட்டுவது எங்ஙனமென்று சொல்லிக் கவலைப்படுகிறார்கள். இவர்களல்லாச் சிலர், வளர்ந்தவர்கள் பெற்றோர்கள் உபாத்தியாயர்கள் என்னுமிவர்களுட் பலர் தாங்களே சமயக்கொள்கை சமய சாத்திரவுணர்ச்சி தெய்வந் தொழுதல் முதலிய சத்கருமங்களைச் செய்யாதிருக்க, அவர்கள் பிள்ளைகள் அவற்றை எங்ஙனஞ் செய்தல் முடியும்? அப்பிள்ளைகட்கு எங்ஙனம் சமய சாத்திரத்தை ஊட்டுதல் முடியும் என்று நுட்பமாக ஆட்சேபிக்கின்றார்கள். இப்படி இன்னும் பல அபிமானிகள் நம் சமய ஒழுக்கம் அறிவு தெய்வபக்தி முதலியன "உலக்கை தேய்ந்து உளிப்பிடியாயவாறு" காலகதியிற் குன்றிவருகின்றனவேயென்று அநுதாபமுறுகின்றனர். இவர்கள் சொல்லும் நியாயங்களையும் காட்டுங் காரணங்களையும் நாம் முழுவதும் தவறென மறுத்தல் முடியாது. ஆனால் நம் சமயக் கொள்கை ஒழுக்கம் முதலியன குறைதற்கு ஆகிய காரணங்கள் இவைகள் மாத்திரந்தாமோ; இல்லையேல் இன்னமுஞ்சில நிசமான ஏதுக்கள் உண்டோ என்பதை ஆராயத்தான் வேண்டும். இரும்பை விழுங்கிவிட்டுச் சுக்கை அவித்துக் குடித்தால் நோய் மாறுமென்று காத்திருத்தல் முடியாது. எங்கள் சமயக் கொள்கைகளும் சமய நூலறிவும் ஒழுக்கங்களும் காலந்தோறும் தேய்ந்து வருதற்காகிய பிரதான காரணங்கள் இன்னுஞ் சிலவுண்டு. அவற்றை அடுத்த பிரசுரத்தில் எடுத்துக் கூறுவோம்.

இறக்குமதி ஏற்றுமதிச் சலனம்

முதல் ஐந்து மாதத்திய நிலைமை

கொழும்பு ஜூன் 8

இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களுள் இத்தீவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பைப்பற்றியும், இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் பொருட்களின் மதிப்பைப் பற்றியும் சில புள்ளி விவரங்கள் வெளியாகியிருக்கின்றன. இவைகளைக் கவனிக்கும்போது, இத்தீவில் இறக்குமதி செய்யப்பட்டு வரும் மிக முக்கியமான சரக்குகளில் குறைவு ஏற்படவில்லையென்று தெரிய வருகிறது. சில பொருட்களின் இறக்குமதி கூடியிருக்கிறதெனலாம். கறுவா எண்ணெய், புல்லெண்ணெய் முதலியவைகளின் ஏற்றுமதியில் நல்ல முன்னேற்றம் ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் கடந்துபோன வருடங்களைவிட அதிகமாக இந்தவருடத்தில் குறித்த எண்ணெய் ரகங்கள் ஏற்றுமதியாகியிருக்கின்றன. கொப்பறாவின் ஏற்றுமதியும் கூடியிருக்கிறது. ஆனால், தேங்காயெண்ணெய், தேங்காய்ப்பூ முதலியவைத்தொழிலில் முன்னேற்றமில்லை. ஏற்றுமதியில் இச்சரக்குகள் குறைந்துவிட்டதால் இத்தொழிலுக்குச் சிறிது பாதகம் ஏற்பட்டிருக்கிறது. இத்தீவின் சென்ற மாதத்தில் 6,81,674 அரிசி மூடைகள் இறக்குமதியாகியிருக்கின்றன. சென்ற மாதத்தில் மோட்டாருக்கு உபயோகப்படுத்தும் 'ஸ்பிரிட்'டில் (எண்ணெய்) 27,56,140 'கலன்'கள் இறக்குமதியாகியிருக்கின்றன. சென்ற மே மாதத்தின் கடைசி வாரத்தில் மாத்திரம் 10 லட்சம் கலனுக்கு மேலாக குறித்த எண்ணெய் இலங்கைக்கு சேர்ந்திருக்கிறது. மண்ணெண்ணெய் இறக்குமதியும் கூடியிருக்கிறது. சென்ற மாதம் 1,94,150 அந்தர் சர்க்கரை இறக்குமதியாகியிருக்கிறது. சென்ற வருடங்களைவிட இச்சரக்கு இறக்குமதியும் கூடியிருக்கிறது. 12,90,759 ரூபாய் மதிப்புள்ள ஜவுளிகள் சென்ற மாதத்தில மாத்திரம் இறக்குமதியாகியிருக்கின்றன.

காலஞ் சென்ற கெயிசர் சக்கரவர்த்தி

ஐரோப்பாக் கண்டத்திலும் பின்னர் உலகத்தின் ஏனைய கண்டங்களிலும் பேர் படைத்தவர் கெயிசர்; இவரை நல்லவர் என்று ஒரு சாரார் சொல்ல, பொல்லாதவரென்று இன்னொரு சாரார் சொல்லுவர்; ஆனால் இருசாராரும் கெயிசரின் சங்கவிரோதிகளாயுள்ளாரும் கெயிசர் ஒரு சுத்தவீரன் என்பதை மறுத்துச் சொல்லார்கள்.

கெயிசர் 1859-ம் ஆண்டு ஜனவரி மாசம் 27-ம் தேதி பெர்லின் நகரிற் பிறந்தவர். இவர் புருஷிய சக்கரவர்த்தியாகிய பிரடிறிக் என்பவருடைய புதல்வர்; கெயிசருடைய தாயார் விக்ரோறியா மகாராணியின் மூத்த மகளாகிய விக்ரோறியா ராசகுமாரியாவர். பிறக்குங் காலத்திற் செய்த வைத்தியத்தினால் இக்குழந்தையின் இடக்கை ஊறடைந்து பின்னர் எக்காலத்தும் வழங்காததாயிருந்தது. கெயிசருடைய வீரத்திற்குத் திறமைக்கும் அந்த ஒற்றைப் புயம் எக்காலத்தும் இடையூறாகவே இருந்ததாம். 1888-ம் ஆண்டு யூன்௴ 15௳ தமது 29-ம் வயசில் இரண்டாம் உவில்ஹெம் என்னும் பெயருடன் புருஷிய நாட்டு அரசாகச் சிம்மாசனம் ஏறினர். புருஷியநாடு காலகதியில் விருத்தியாகி ஒரு சக்ராதிபத்தியமாக மாற இரண்டாம் உவெல்ஹெமும் சக்கரவர்த்தியானர். கெயிசரென்பது ஜர்மனியைப் பரிபாலிக்கும் அரசருக்குப் பட்டப் பெயராகும். இவர் காலத்தில் ஜர்மனிய சக்ராதிபத்தியத்திற் செல்வம் விருத்தியடைந்தது; கைத்தொழில் சாலைகளும் அதிகப்பட்டது; இவர் காலத்தில் உலகம் முழுவதிலும் பராக்கிரமமுடையதென்று சொல்லக்கூடிய படைவலி ஜர்மனியில் இருந்தது; மேலும் ஜர்மனிய சனங்கள் கெயிசர் சொன்னபடியே நடக்கப் பயின்று கொண்டார்கள். கெயிசர் சக்கரவர்த்தி காலத்தில முதன் முதல் நடந்த விசேஷ சம்பவம் புருஷிய ராச்சியத்தை ஜர்மனிய சக்ராதிபத்தியமாக்கி ஜர்மனியை உன்னத நிலையில் வைத்த ஜர்மனிய இராசதந்திரியாகிய பிஸ்மார்க் என்பவரை உத்தியோகத்திலிருந்து விலக்கிவிட்டமையாகும். இச்செயல் 1890-ம் ஆண்டில் நடைபெற்றதாகும். கெயிசருடைய மனத்திற் குடிகொண்டிருந்த கொள்கைகள் இரண்டு, முதலாவது ஐரோப்பாக் கண்டம் முழுவதிலும் தமக்குச் செல்வாக்கிருக்க வேண்டுமென்பது. இரண்டாவது கொள்கை கடல்வலிமையிற்றான் ஜர்மனியருடைய பெருவலி தங்கியிருக்க வேண்டுமென்பதாம்.

1914-ம் ஆண்டில் கெயிசர் தம்மிடத்திலிருந்த சைனிய வலிமையினால் உந்தப்பட்டு இங்கிலாந்திற்கு மாறாக மகாயுத்தத்தைத் தொடங்கினர்; அக்காலத்தில் அவருடைய சைனியத் தலைவராகிய வொன் ஹின்டன்பர்க் என்பவரும் அவருக்கு உற்றதுணையாக நின்றனர். நான்கு வருட காலமாகக் கோரமான யுத்தம் நடந்தபின் 1918-ம் ஆண்டு கெயிசர் தமது இராச்சியத்தை விட்டு நீங்கி ஒல்லாந்து நாட்டிற்கு ஓடி அங்கே ஒதுக்கிடந்தேடி வசிக்க வேண்டி நேரிட்டது. அவர் ஒல்லாந்திலுள்ள அமரோஞ்ஜன் என்னும் மாளிகையிற் சிலகாலம் இருந்து பின்னர் டோர்ன் என்னுமிடத்தில் மரணபரியந்தம் வசிக்க வேண்டியவரானர். 23 வருஷ காலமாகக் கெயிசர் இராச்சியமிழந்த அரசராக வாழவேண்டி ஏற்பட்டது.

கெயிஸர் ஒல்லாந்தில் ஒதுக்கிடந் தேடியிருக்கும்போது மகாயுத்தம் நின்று சமாதானம் உண்டானபின்னர் அவரை விலங்கிட்டுக் குற்றவாளியெனக் கண்டு மரண தண்டனை விதிக்க வேண்டுமென்ற கிளர்ச்சியும் அந்த நேரத்தில் உண்டாயது. கெயிஸர் விக்ரோறியா மகாராணியின் பேரன் என்பதுதானும் அப்பொழுது சிந்திக்கப்படவில்லைப் போலும். ஆனால் ஒல்லாந்த அரசினர் தம்மிடம் அடைக்கலம் புகுந்த சக்கரவர்த்தியை எதிரிகளின் கையிற் கொடுக்க மறுத்து விட்டார்கள். இது நடந்தது 1920-ம் ஆண்டு ஜனவரி மாசம் 16-ம் தேதியாகும்.

உலகத்திலுள்ள செல்வ அரசர்களுள் கெயிசர் சக்கரவர்த்தி அதிக செல்வத்தையுடையவரா யிருந்தார். அவர் பணவங்கிகளில் இரண்டு லட்சம் பவுண் இட்டு வைத்திருந்தாராம். அது மாத்திரமல்லாமல 44 மாளிகைகளும் 74 பெரிய தோட்டங்களும் அவரிடத்திலிருந்தன. கெயிஸர் 1881-ம் ஆண்டில ஆக்ஸ்டா விக்ரோறியா என்னும் இராசகுமாரியை மணஞ் செய்தார். அந்த அரசிபெற்ற பிள்ளைகள் 6 புதல்வரும் ஒரு பெண்ணுமாவர். 1921-ம ஆண்டு அதாவது தாங்கள் அரசிழந்த பின் அந்தராணி தேகவியோகமாயினள். 1922-ம ஆண்டு நவம்பர் மாசத்தில் கெயிஸர் ஹெர்மியோன் ராசகுமாரியைப் புனர் விவாகஞ் செய்தார்; இந்தப் பெண் முந்தி ஜர்மனியராசவமிசத்திலுள்ள ஒருவரை முடித்து விதவையாக இருந்தவள்.

கெயிஸர் சக்கரவர்த்தி தாம் நாடிழந்து ஒதுக்கிடந்தேடி ஒல்லாந்த நாட்டில் இருந்த காலத்தில் ஒரு சாமானிய மனுஷன்போல் விறகு தறித்துக் கொண்டும் பல வேலைகளைச் செய்து கொண்டும் படித்துக்கொண்டும் தம அநுபவங்களை எழுதிக் கொண்டும் காலம் போக்கினரென்று சொல்லப்படுகின்றது. ஹிட்லர் ஜர்மனியைத் தொன்மை நிலையில வைக்க முயற்சி செய்து வந்ததும் யுத்தங்களில் வெற்றியடைந்து வந்ததும் கெயிஸருக்கு அகத்திற் பெரும் மகிழ்ச்சியாம். ஆனால் அவைகளைப்பற்றி எதனையும் வாய்திறந்து வெளியிட்டிலராம். தமது சக்ராதிபத்தியம் தம் காலத்திலும் பார்க்க இக்காலத்திற் பராக்கிரமமடைந்து வெற்றிபெற்று வருகிறதென்ற எண்ணத்துடன் கெயிஸர் இறந்தனளார். இச்சக்கரவர்த்தியின் வழித்தோன்றல்கள் பழையபடி அரசிமையைப் பெறுவரோ இல்லையோ. இக்கெயிஸர் தாம் ஜர்மனியின் கடைசியரசரோ யாரறிவார்.

கோல்பேஸில் விமானத்தாக்குதல்

மன்னர் பிறந்ததின ராணுவப் பயிற்சிக்கு ஒத்திகை

ஜூன்மாசம் 12-ம் திகதியன்று மன்னர் பிறந்த தினத்தையொட்டி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் இராணுவப் பயிற்சியின் ஒத்திகை சென்ற வெள்ளிக்கிழமை மாலை கோல்பேஸ் மைதானத்திலும் மைதானத்துக்கு மேலும் நடைபெற்றது.

ரோயல்விமானப்படை விமானங்கள் காலை முழுவதும் ஆகாயத்தில வட்டமிட்டுக் கோல்பேஸ் மைதானத்தில் நிறுத்தப்பட்டிருந்த துருப்புகளைத் "தாக்குவதற்கு"த் தாழப் பறந்தன.

தரைத் துருப்புக்களின் ஒத்திகை யொன்று விமானங்களின் ஒத்துழைப்பின்றி வியாழக்கிழமை பின்னேரம் நடைபெற்றது.

இறுதி ஒத்திகை இன்னுஞ் சில தினங்களில் நடைபெறும். 12-ம் திகதி காலையில் நடைபெறும் இராணுவப் பயிற்சி கம்பீரமுள்ளதாகவும் வேடிக்கையானதாகவு மிருக்கும்.

ஐ. மா. அசெம்பிளித் தலைவர் வேலைகள்

கவர்னரின் உத்தரவு

அலகபாத் யூன் 2

ஐக்கிய மாகாண அசெம்பிளித் தலைவரான கனம் புருஷோத்தமதாஸ் தண்டன் இப்பொழுது சிறையிற் பாதுகாப்பிலிருந்து வருவதால் அவருடைய அலுவல்களை மே 28ம் தேதிமுதல் அரசாங்க சட்டசபை இலாகாக் காரியதரிசி கவனித்து வர வேண்டுமெனக் கவர்னர் உத்தரவிட்டிருக்கிறார்.

சேத்பஜாஜ் விடுதலை

அசௌக்கியம் காரணம்

நாகபுரி ஜூன் 3—

இன்றுவிடியற்காலை நாகபுரிமத்தியஜெயிலிலிருந்து சேத்ஜம்னுலால் பஜாஜ் தேகஅசௌக்கியங் காரணமாக விடுதலை செய்யப்பட்டார். அவர்உடனே வார்தாவுக்குச் சென்றார். 1940 டிசம்பரில அவருக்கு 9 மாதக் காவல்தண்டனை விதிக்கப்பட்டது. அதன்படி அவர் இன்னும் மூன்றுமாதச் சிறையில் இருக்கவேண்டும். இடையில் அசௌக்கியமேற்பட்டதால் முன்னதாக விடுதலை செய்யப்பட்டார்.

பாறையைத் தகர்க்கையில் விபத்து

வெடிமருந்து திடீரென்று தீப்பற்றியதால் விபரீதம்

தொழிலாளிக்குத் தேகமெங்கும் காயம்

திரிகோணமலை யூன் 5—

விமானப்படை பத்திரகாரியாலய கொண்ட்ராக்டர்களான கலண்டர் கேபின் கம்பெனியில வேலைபார்க்கும் மட்டக்களப்புச் சோனகர் ஒருவர் ஒரு பாறையை வெடி வைத்து உடைப்பதற்கு வெடி மருந்தைத் திணிக்கையில் திடீரென்று தீப்பற்றிக்கொண்டதால் ஒரு கோர விபத்துச் சம்பவித்தது.

விபத்தில் சிக்கிய குறித்த தொழிலாளி அந்த இடத்திலிருந்து சில யார் தூரத்திலுள்ள ஹிந்துஸ்தானி கம்பெனிக்குச் சொந்தமான டிஸ்பென்ஸரிக்குச் செல்லுகையில வழியில பிரக்ஞை யிழந்து றோட்டில விழுந்தார். அவ்வமயம் அவ்வழியாக ஒரு லொறியிற் சென்ற ஹிந்துஸ்தான கம்பெனியைச் சேர்ந்த மிஸ்டர் என். வி. சாட்டர்ஜி குறித்த டிஸ்பென்ஸரிக்கு எடுத்துச் சென்றார். அங்கு ஆரம்பசிகிச்சை யளிக்கப்பட்ட பின் அவர் மிஸ்டர் சாட்டர்ஜியால் திரிகோணமலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

விபத்துக்குள்ளானவரின் உடம்பெல்லாம் பலத்த காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவருடைய ஒரு கண்ணிலும் காயமேற்பட்டிருக்கிறது. அவருடைய நிலைமை கவலைக்கிடமானதாய் இருப்பதாகத் தெரிகிறது.

குறித்த விபத்து திரிகோணமலையிலிருந்து ஏறக்குறைய எட்டு மைல் தூரத்திலுள்ள சீனக்குடாவுக்கு சமீபத்தில் நிகழ்ந்தது. விபத்துக்குள்ளானவர் தங்கிக்கப்பிளேன்கள் போடுவதற்கு அகழிகள் தோண்டிக்கொண்டிருக்கையில ஒருபாறை எதிர்ப்பட்டதால் அதை வெடிவைத்து உடைக்க முயற்சித்தபொழுது விபத்துச் சம்பவித்தது.

வெள்ளம் விளைத்த சேதம்

தென்மலையாளத்தில் 60 பேர் உயிர் இழந்தனர்

சென்னை ஜூன் 2—

ஷோரனூர்-திரூர் பிரிவிலேற்பட்ட உடைப்புகள் அடைபட்டு விட்டன. ஷோரனூர் மங்களூரில் நேரான போக்குவரத்துக்கள் நடக்கின்றன. நெ 705, 706 வண்டிகள் ஷோரனூர் கள்ளிக்கோட்டைப் பிரிவில் நேரான போக்குவரத்தில்லை. ஷோரனூர் ஒல்லூர்-புதுக்கட் பிரிவுகளில் 4ந்தேதி முதல்வண்டி மாற ஏற்பாடு செய்யப்படும். 16-ந் தேதி வளவில் ஷோரனூர் ஒத்தப்பாலப் பிரிவிலும் ஒல்லூர்-புதுக்காடு பிரிவில 23-ந் தேதியளவிலும் நேரான போக்குவரத்து ஆரம்பமாகலாம்.

புயலால் ஏற்பட்ட உயிர்ச்சேதம்

கள்ளிக்கோட்டை ஜூன் 2—

தென்மலையாளத்தில புயல் காரணமாக இதுவரையில் 60 பேர்கள் இறந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இன்று 'டுப்ளிக்கேட் மலபார் எக்ஸ்பிரஸ்' மாலை 3-30 மணிக்குப் புறப்பட்டது. ஷோரனூர், திருச்சூர் வரையிலுமே டிக்கட்டுகள் கொடுக்கப்பட்டன. டுப்ளிகேட் மலபார் கொச்சி எக்ஸ்பிரஸ்கள் ஒலவக்கோட்டிலிருந்தே சென்னைக்குப் புறப்படும் ஷோரனூரிலிருந்து ஒலவக்கோடு செல்ல விரும்புவோர்கள் சொந்தமான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளவேண்டும். புயலால் ஏற்பட்ட சேதங்களின் விவரம் கலெக்டருக்குக் கிடைக்கவில்லை. பயிர்களுக்கேற்பட்ட சேதத்தைப் பற்றி அறிக்கைகள் அனுப்புமாறு கேட்டிருப்பதாய்த் தெரிகிறது.

நேற்றிரவு கள்ளிக்கோட்டையில் மீண்டும் மழைபெய்தது. மாலை 2-45 வரையில் மழையும் காற்றுமாயிருந்தது.

வள்ளுவநாடு தாலுகாவில் குன்றுகளுள்ள பிரதேசத்தில் நிலச்சரிவு காரணமாக இரண்டு தினங்களுக்கு முன் 6 வீடுகள் நாசமாயிற்றென்றும் 4 பேர் இறந்தனர் என்றும் தெரிகிறது.

ஆலப்பு மழையிலிருந்து ரூ 20 ஆயிரம் மதிப்புள்ள சரக்குடன் வந்தவொரு படகு நேற்றுப் பொன்னானிக்கப்பால் நடுக்கடலில் கவிழ்ந்துவிட்டது. அதிலிருந்த 15 பேர்களில் 5 பேர்களே இன்று மாலைகரைசேர்ந்தனர். மற்றவர் மூழ்கிவிட்டதாகக் கூறப்படுகிறது.

கள்ளக் கையொப்பமிட்டதாக

துறைமுக அதிகாரிமீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் யூன் 5

இப்பொழுது கொழும்பில் வசித்துவருபவரும் துறைமுக இலாகாவைச் சேர்ந்த உதவித் தடை அதிகாரியுமான திரு ஈ.பி. அல்பிரெச்ட் என்பவர்மீது இரண்டு பற்றுச்சீட்டுக்களில் டி. சுப்பிரமணியமென்று கள்ளக் கையொப்பமிட்டு அவை டி. சுப்பிரமணியத்தால் கைச்சாத்திடப்பட்டவையென்று பொய் கூறிப் பருத்தித்துறைத் துறைமுகப் பகுதியைச் சேர்ந்த ஷிறப் திரு. எஸ். டி. செல்லையாவிடம் கொடுத்து அவரை ரூபாய் 555 கொடுக்கும்படி ஷிறப்பைத் தூண்டியதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்குச் சென்ற மூன்று தினங்களாகப் பருத்தித்துறை நீதிபதி கோட்டில் விசாரணை செய்யப்பட்டது.

கொழும்பிலுள்ள உதவி அரசாங்கப் பரிசோதகரான திரு டி. நாகேந்திரம் தமது சாட்சியத்தில் குறித்த பற்றுச்சீட்டுகளிலுள்ள கையொப்பங்களை எதிரியின் கையெழுத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துப் பரிசோதனை செய்ததாயும் டி. சுப்பிரமணியம் என்ற கையொப்பங்கள் எதிரியால் எழுதப்பட்டவையென்று தாம் அபிப்பிராயப்படுவதாயும் கையொப்பம் வைக்க உபயோகித்த பேனாவும் அந்தப் பற்றுச்சீட்டுக்களை எழுத உபயோகித்த பேனாவும் ஒன்றல்லவென்றும் தெரிவித்தார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த உதவித்தடை அதிகாரி கூறியதாவது:-

'நான் இந்த இலாகாவில் ஏறக்குறைய 20 வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன். சென்ற 14 வருடகாலமாக நான் உதவித்தடை அதிகாரியாகக் கடமையாற்றியிருக்கிறேன். குறிப்புப் புஸ்தகத்தில் நான் குறிப்புகள் தாக்கல் செய்திருக்கிறேன். வழக்கமாக அதிகாரிகள் தகவல் கொடுப்போரின் பெயரைக் குறிப்பிடாமலேயே குறிப்புத் தாக்கல் செய்வார்கள். துறைமுகப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டால் தகவல் தெரிவித்தோருக்குச் சன்மானம் வழங்கப்படும். சில சந்தர்ப்பங்களில் ஒன்றுக்கு அதிகமானவர்கள் தகவல் தெரிவித்தால் அவர்களுக்கெல்லாம் சன்மானம் வழங்கப்படும். தமக்குத் தகவல் கொடுத்தவர் யார் என்பதை தோனிக்கும் பொறுப்புத் தடை அதிகாரி உடையது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த டி. பொன்னையா என்பவர் தமது சாட்சியத்தில் தாம் எதிரிக்குக் கடிதமூலம் அனுப்பிய தகவலின் விளைவாகவே 1938-ம் ஆண்டு யூன் மாதம 15-ந் தேதி பீடிப்புகையிலை பறிமுதல் செய்யப்பட்டதென்று கூறி அக்கடிதத்தின் பிரதி ஒன்றைச் சமர்ப்பித்தார். அந்தப்புகையிலை பறிமுதல் செய்யப்பட்டதற்காகத் தமக்கு ரூபாய் 100 சன்மானம் வழங்கப்பட்டதென்றும் அதைப் பறிமுதல் செய்வதற்கு டி. சுப்பிரமணியமும் தகவல் கொடுத்ததாக எதிரியால் சேர்த்துக் கொள்ளப்பட்டு அவருக்குச் சன்மானம் வழங்கப்பட்டதென்றும் கூறினார்.

குறுக்கு விசாரணை செய்யப்பட்டபொழுது சாட்சி சுப்பிரமணியத்துக்குச் சன்மானம் வழங்கப்பட்டதைத் தாம் ஆக்ஷேபிக்கவில்லையென்றும் எதிரிக்கு மற்றொருவரிடமிருந்து தகவல் கிடைத்திருப்பதாகத் தாம் கருதியதாகவும் பல சந்தர்ப்பங்களில ஒன்றுக்கு அதிகமானவர்கள் தகவல் கொடுத்ததற்காகச் சன்மானம் வழங்கப்பட்டிருப்பது தமக்குத் தெரியுமென்றும் கூறினார்.

மீண்டும் விசாரிக்கப்பட்டபொழுது டி. சுப்ரமணியமென்னும் பெயருள்ள தகவல் தெரிவிப்பவரைத் தமக்குத் தெரியாதென்று அவர் கூறினர்.

மேல் விசாரணை ஜூலை மாதம் 28-ம் 29-ம் 30-ம் திகதிகளுக்குப் பின்போடப்பட்டது.

கொம்பு முளைத்த தோடம்பழம்

சாமி மலையை அடுத்த பெரிய சூரியகந்தை (லட்புரூஸ்) தோட்டத்து 'டீமேக்க'ரான மிஸ்டர் வை. டி. எட்வேட்ஸிடம் கொம்பு முளைத்துள்ள தோடம்பழமொன்று இருக்கின்றதாம். அதிசயமான இந்தப் பழத்தைப் பார்க்க வருகிறவர்கள் அவரவர் இஷ்டம்போற் பணங் கொடுக்கிறார்களாம். அந்தப் பணத்தை அவர் யுத்தநிதிக்கெனச் சேர்த்து விடுகிறாராம்.

சைவவித்தியா விருத்திச் சங்க அநாதசாலை

சைவவித்தியா விருத்திச் சங்கத்தாரால் திருநெல்வேலியில் வாடகைக்கு எடுக்கப்பெற்ற ஓர் இலலத்தில் நடத்தப் பெற்று வந்த அநாதசாலை இப்போது சைவவித்தியா விருத்திச்சங்க ஆசிரிய பயிற்சிக் கழகத்துக் கணித்தாக உள்ள ஒரு நிலத்தில் இதற்கென அமைக்கப்பட்டுள்ள ஓர் இடத்தில் நடத்தப்படுகின்றது.

தி மலாயன்
டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்
கள்சிமேந்து வகைகள்
விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்
"புறோப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y. 19 4-3-41—3-3-42"

விவாகம்

வைரமுத்து-நாகம்மாள்

சென்ற (6-6-41) வெள்ளிக்கிழமையன்று இரவு 9 மணி 18 நிமிஷமளவில் வரும் மகாலக்கின சுபமுகூர்த்தத்தில் வண்ணை வைத்தீசுவர வித்தியாலய ஆசிரியர் திருவளர் செல்வன் கா. வைரமுத்து அவர்களுக்கும் தலையாளி திரு. வே. செல்லப்பா அவர்களின் சிரேஷ்ட புதல்வி திருவளர் செல்வி நாகம்மாளுக்கும் மணமகளில்லத்தில் விவாகம் மிக்கசிறப்பாக நடைபெற்றது.

